மலர் : 12 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 8

TVGM தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஜுன் 2012**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2012 ஜுன்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## உன்

## ஆயுசுநாட்களைப்

## பூரணப்படுத்துவேன்.

**யாத்திராகமம் 23 : 26.**





**காஞ்சிபுரம் மாவட்டம் – அச்சரபாக்கம்** கிராமத்தில் கட்டப்பட்ட ஜெபவீடு 21.04.2012 அன்று **பாஸ்டர் ஜேசன் பிலிப்** ( மலேசியா ) அவர்களால் தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**நன்றி : Yishun Evangelical Church - Singapore.**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்





**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
TASOL ஸ்தாபகர்
**Cell : 94449 80445**
100village@tvgm.org

P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**
jesus100villages@yahoo.com

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே !

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

TVGM & TASOL ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்று வருகின்றன.

ஏப்ரல் 21 அன்று **பாஸ்டர் ஜேசன் பிலிப்** ( மலேசியா ) அவர்கள் அச்சரபாக்கம் கிராமத்தில் கட்டப்பட்ட ஜெபவீட்டை தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்தார்கள். 24.04.2012 அன்று சோழன் நகரில் ( திருச்சி ) கட்டப்பட்ட ஜெபவீட்டை பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார்.

கர்த்தருடைய கிருபையால் ஏப்ரல் 29 முதல் மே 1 ம் தேதி வரை TVGM ஆண்டு விழா கூட்டங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றன. இதில் கலந்து கொண்டு சிறப்பித்த யாவருக்கும் நன்றி.

மே 2ம் தேதி எங்கள் சிறுவர் இல்லப் பிள்ளைகளோடும், அலுவலக பணியாளர்களோடும் கோயம்புத்துாருக்கு சுற்றுலா செல்ல தேவன் கிருபை செய்தார். அவருடைய கிருபைக்காகவும், பாதுகாப்புக்காகவும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

2012 - 2013 கல்வியாண்டியல் சிறுவர் இல்லப் பிள்ளைகள் மற்றும் முழுநேரப் பணியாளர்களின் பிள்ளைகள் கல்வித் தேவைகள் சந்திக்கப் பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

TVGM ஊழியங்களை ஜெபத்தாலும், பொருளாதாரத்தாலும் தாங்கி வரும் ஒவ்வொருவருக்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில்,
**ஸ்டீபன் கிறிஸ்டோபர்.**

**Date : 10.05.12**

# உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன்.

**யாத்திராகமம் 23 : 26**

இந்த மாத வாக்குத்தத்திற்காக காத்திருக்கும் சகோதர, சகோதரிகளே!

இந்த மாதம் தேவன் உங்களுக்குக் கொடுக்கும் வாக்குத் தத்தம் : **யாத். 23 : 26**

**உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன்.**

ஆம் ! அன்பான சகோதர, சகோதரிகளே தேவன் உங்கள் ஆயுசு நாட்களை பூரணப்படுத்த விரும்புகிறார்.

இன்றைக்கு அநேக மக்கள் நீண்ட நாள் வாழவேண்டும் என்பதற்காக அநேக காரியங்களை செய்கின்றனர். சிலர் தங்கள் ஆயுசு நாட்களை பெருக்குவதற்கு உடற் பயிற்சி செய்கின்றனர், சிலர் சத்துள்ள உணவுகளை உட்கொள்கின்றனர், சிலர் மருத்துவ பரிசோதனைகளை தவறாமல் செய்து கொள்கின்றனர். இவைகளெல்லாம் ஆயுசுநாட்களைப் பெருக்குவதற்கு உதவும். ஆனால் தேவன் தான் உங்கள் ஆயுசுநாட்களை பூரணப் படுத்த முடியும்.

நம்முடைய வாழ்க்கை இந்த உலகத்தில் மிக குறுகிய ஒன்றாக இருக்கிறது. இந்த வாழ்வில் தேவன் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு திட்டத்தை நிர்ணயித்துள்ளார். ஆனால் அநேகர் இந்த திட்டத்தை நிறைவேற்றும் முன் இறந்து விடுகின்றனர். சிலர் மட்டும் தான் தேவன் அவர்களுக்கு கொடுத்த திட்டத்தை சரியாக முடிக்கின்றனர். நம்முடைய மரணத்திற்கு முன்னால் நாம் இந்த திட்டத்தை முடிப்பது நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.

தேவன் நமக்கு பூரண ஆயுசை தர விரும்புகிறார். சிலர் பல காரணங்களால் தங்கள் இளம் வயதிலேயே இறந்துவிடுகின்றனர். சிலர் நடுத்தர வயதில் இறக்கின்றனர். சிலர் தங்களுடைய முதிர்வயதில் இறக்கின்றனர். ஆனால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே நமக்கு முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அவருடைய சித்தத்தை செய்வதற்கு தேவன் நமக்கு கிருபையையும், பூரண ஆயுசையும் தந்து ஆசீர்வதிப்பார்.

இந்த அதிகாரத்தின் பின்னணியை பார்ப்போமானால் இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தை அடைவதற்கு அவர்களுக்கு மூன்று காரியங்கள் தேவைப்பட்டன.

***1. கீழ்படிதல்***
***2. கூட்டு முயற்சி***
***3. ஆவிக்குரிய பெலன்***

**முதலாவதாக**, இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தை அடைவது பெரும் சவாலாக இருந்தது. அது தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுத்த திட்டம். ஆதலால் தேவன் அவர்களுக்கு கானான் தேசத்தை தருவது அதிக

நிச்சயமாயிருந்தது. தேவனுடைய இந்த திட்டம் நிச்சயமாய் நிறைவேறும் என்றாலும் இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தை சுதந்தரிக்க போராட வேண்டியிருந்தது. இதற்கு இஸ்ரவேல் ஜனங்கள் மோசேக்கு செவிகொடுத்து அவர் கட்டளையிட்ட யாவற்றுக்கும் கீழ்படிய வேண்யது அவசியமாயிருந்தது. அவர்கள் மோசேக்கு கீழ்படிந் திருப்பார்களானால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சீக்கிரம் அடைந்திருக் கலாம். **யாத்.23:29,30**ல் கர்த்தர் இவ்வாறு கூறுகிறார் : –

"தேசம் பாழாய் போகாமலும் காட்டு
மிருகங்கள் உனக்கு விரோதமாய்
பெருகாமலும் இருக்கும்படி, நான்
அவர்களை ஒரே வருஷத்திற்குள்ளே
உன் முன்னின்று துரத்திவிடாமல், நீ
விருத்தியடைந்து, தேசத்தை சுதந்
தரித்துக் கொள்ளும் வரைக்கும்
அவரை கொஞ்சம் கொஞ்சமாய் உன்
முன் நின்று துரத்தி விடுவேன்."

இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்படியாமையி னாலே கானான் தேசத்தை நாற்பது வருடங்களுக்கு பின்பு அடைந்தார்கள்.

இன்று நாம் ஆட்டுக்குட்டி யானவரின் இரத்தத்தால் கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்ட சந்ததியாக இருக்கிறோம். தேவன் நம்முடைய வாழ்க்கைக்கு ஒரு நிச்சயமான திட்டத்தை வைத்திருக்கிறார். அந்தத் திட்டத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற அவர் வாஞ்சையாயிருக்கிறார். நாம் அவருக்கு கீழ்படிந்து நடப்போமானால் அவர் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற உதவி செய்வார். நாம் இஸ்ரவேல் ஜனங்களைப் போல முறுமுறுத்தோம் என்றால் அந்த திட்டத்தை நம்முடைய ஆயுசுநாட்களில் நிறைவேற்ற முடியாமல் போய் விடும்.

**இரண்டாவதாக**, வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிக்க கூட்டுமுயற்சி அவசியமா யிருந்தது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங் களை நடத்துவதற்கு மோசேயை தெரிந்து கொண்டார். அவர் பயிற்சிக் கப்பட்ட தலைவராக இருந்தார். கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை பார்வோனின் கைகளி னின்று விடுவித்தார். கர்த்தர் அநேக அற்புதங்களை செய்தும் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தலைமைத்துவத் திற்கு எதிராக செயல் பட்டு முறுமுறுத்தார்கள். கூட்டு முயற்சியில் எல்லா ஜனங்களும் ஒற்றுமையாயி ருப்பது அவசியமான ஒன்றாகும். ஆனால் இஸ்ரவேலருக்குள்ளே ஒற்றுமை இல்லாததால் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தின் அருகே வருவதற்கே அவர்களுக்கு அநேக ஆண்டுகளாயிற்று.

ஆதலால் நாம் மற்ற மக்களோடு ஒற்றுமையாக இருந்தால் தான் நம்முடைய வாழ்க்கையில் கர்த்தரின் திட்டத்தை நிறைவேற்ற எளிதாயி ருக்கும். நாம் இந்த ஒற்றுமையின் குணத்தை தொடர்ந்து வளர்த்து கொள்ள வேண்டும். நாம் ஒருங்கிணைந்து வேலை செய்யும் போது தேவன் நமக்கு வைத்திருக்கும் திட்டத்தை எளிதாக நிறைவேற்றலாம். மேலும் இப்படி செய்யும்போது கர்த்தர் நாம் நினைப்பதற்கும் மேலான அற்புதங்களைச் செய்வார்.

**மூன்றாவதாக**, கானான் தேசத்தை அடைவதற்கு ஆவிக்குரிய பெலன் தேவைப்பட்டது. ஏனென்றால் இஸ்ரவேல் அந்நிய தேவர்களை வணங்காமல் இஸ்ரவேலின் தேவனை மட்டுமே பற்றிக் கொள்ள வேண்டியதாயிருந்தது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு யாத். **23 : 32,33ல்** இந்தக் கட்டளையைக் கொடுக்கிறார்:

"அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக. அவர்கள் உன்னை எனக்கு விரோதமாக பாவம் செய்யப் பண்ணாதபடிக்கு உன் தேசத்திலே குடியிருக்க வேண்டாம். நீ அவர்கள் தேவர்களை சேவித்தால் அது உனக்கு கண்ணியாயிருக்கும் என்றார்."

ஆனால் இஸ்ரவேலர் விக்கிரகங்களை செய்து அந்நிய தேவர்களை வணங்கினார்கள் என்று பார்க்கிறோம். இவர்கள் கர்த்தர் செய்த அற்புதங்களை கண்டும் அவருடைய வல்லமையை புரிந்து கொள்ளவில்லை. தேவனுடைய மகிமையைக் காணாதபடிக்கு அவர்கள் கண்கள் கட்டடப்பட்டிருந்தது. ஆதலால் அவர்கள் கானார் தேசத்தை அடைவதில் பின்தங்கினார்கள்.

இன்றைக்கு நமக்கும்கூட தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற ஆவிக்குரிய பெலன் தேவைப்படுகிறது. நாம் அசுத்தமுள்ளவர்களாய் மாற அநேக சந்தர்ப்பங்கள் இருக்கிறது. ஆனால் நம்மை பரிசுத்தமாக காத்து கொள்ள அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். இந்த ஆவிக்குரிய பெலனை நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டால் அவர் திட்டத்தை முடிக்க நமக்கு கிருபை செய்வார். அந்த திட்டம் நமக்கு செய்ய முடியாத ஒன்றாக தோன்றினாலும் கர்த்தர் நிச்சயமாக நமக்கு உதவி செய்வார்.

கர்த்தர் நமக்கு வைத்திருக்கும் திட்டத்தை நிறைவேற்றவும் அதற்கான பெலனை பெற்றுக் கொள்ளவும் இரண்டு காரியங்களை செய்ய வேண்டும்.

***1. கர்த்தர் மேல் நம்பிக்கையாக இருக்க வேண்டும்.***

***2. பரிசுத்த ஆவியானவரின் சத்தத்துக்கு கீழ்படிய வேண்டும்.***

**முதலாவதாக**, நாம் கர்த்தர்மேல் மட்டும் நம்பிக்கையாக இருக்க வேண்டும். மற்ற தேவர்களையும், விக்கிரகங்களையும் வணங்கி அவர்களுடைய வழிகளை பின்பற்றக் கூடாது. மற்ற தேவர்களோடு உடன்படிக்கை செய்யக்கூடாது. தேவபக்தி இல்லாத நபர்களை உங்கள் வாழ்க்கையில் நுழைய விடாதீர்கள். இதை **யாத். 23ம்** அதிகாரத்தில் வாசிக்கலாம். இப்படி கர்த்தரை மட்டும் நம்புவோமானால் அவர் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பார். சங்கீதக்காரன் சங். 20 : 7 ல் இவ்வாறு கூறுகிறார் : "சிலர் இரதங்களைக் குறித்தும் சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள், நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்". ஆதலால் கர்த்தரை மட்டும் நம்புங்கள்.

இப்படி செய்வோமானால் கர்த்தர் நமக்கு நித்திய ஜீவனை மட்டுமல்ல உலக பிரகாரமான ஆசீர்வாதங்களையும் கொடுப்பார்

என்று இந்த அதிகாரத்திலே வாசிக்கலாம். என்னென்ன ஆசீர்வா தங்கள் என்று பார்க்கலாம். அவர் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார், நம்முடைய நோய்களை நம்மைவிட்டு விலக்குவார், குழந்தை பாக்கியம் கொடுப்பார், அவருடைய பயத்தை நமக்கு முன்பாக அனுப்புவார், நம் எதிரிகளை துரத்துவார், கடைசியாக **நம் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவார்.**

**இரண்டாவதாக**, நாம் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்துக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும். நாம் சுயமாய் எதிர்காலத்தை கண்ணோக்க முடியாது. ஆதலால் நாம் பரிசுத்த ஆவிக்கு கீழ்படிந்து ஆவியில் நடக்க வேண்டும். எது சரியான பாதை என்பதை பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தி நம்மை உண்மையில் வழிநடத்துவார். **கலாத்தியர் 5 : 16**ல் இவ்வாறு வாசிக்கலாம்: –

**“பின்னும் நான் சொல்லுகிறது என்ன வென்றால் ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.”**

நாம் ஆவிக்கேற்றபடி நடந்தால் உலக இச்சைகளை மேற்கொள்ளலாம். நாம் தவறான பாதைகளில் செல்ல மாட்டோம். பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலால் நம்முடைய எதிர் காலத்தை தைரியத்தோடும் நம்பிக்கையோடும் எதிர்கொள்ள முடியும்.

***பக்தன் பாடுகிறார் :***

**கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்க**
**அவரை நம்பி கீழ்படி**
**அவரை நம்பி கீழ்படி**
**இதற்கு வேறு வழிகளில்லை.**

இந்தப் பாடலைப் பாடிக் கொண்டே பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள்.

**“நான் கர்த்தர்பேரில் மட்டும் நம்பிக்கை வைத்து, பரிசுத்த ஆவியானவரின் சத்தத்துக்கு செவிகொடுப்பேன்.”**

ஆம் ! இப்படி செய்யும்போது தேவன் உங்களுக்கு நித்திய ஆசீர்வாதத்தைக் கொடுத்து, **உங்கள் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவார்.**

**தேவனுக்கே மகிமை !**

## TVGM ஊழியங்களுக்கு காணிக்கை அனுப்புபவர்கள் கவனத்திற்கு !

TVGM ஊழியத்திற்காக Bank to Bank மூலம் காணிக்கை அனுப்புகிறவர்கள் எந்த பேங்கில் அனுப்புகிறீர்களோ அந்த பேங்கில் தருகிற ரசீதை ஒரு ஜெராக்ஸ் எடுத்து எங்களுக்கு அனுப்பினால் நாங்கள் பேங்கில் சென்று கேட்பதற்கு வசதியாக இருக்கும்.

காணிக்கை அனுப்புகிற யாவருக்கும் TVGM அலுவலகத்தி லிருந்து ரசீதும், நன்றிக் கடிதமும் ஒரு வாரத்திற்குள் அனுப்பி வருகிறோம். ஒருவேளை நீங்கள் பேங்க் மூலம் அல்லது மணியார்டர், டிராப்ட், செக் அனுப்பி ரசீது மற்றும் நன்றிக்கடிதம் உங்களுக்கு வரவில்லையென்றால் தயவுசெய்து உடனே தெரியப் படுத்தும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# நாமக்கல் மாவட்டம் - பள்ளிபாளையம் யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை

## தேதி : 09 .04. 2012 முதல் 13.04.2012 முடிய



கர்த்தருடைய கிருபையினால் நாமக்கல் மாவட்டம் – **பள்ளிபாளையம்** யூனியனில் 09.04.2012 திங்கள் முதல் 13.04.2012 வெள்ளி வரை **100–கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை பள்ளிபாளையம் சாலோம் திருச்சபையின் **பாஸ்டர் ஜான் ஒயிட்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 41 கிராம ஊழியர்கள் வந்து கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் பள்ளிபாளையம் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் **பாஸ்டர் ஜான் ஒயிட்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். TVGM காரியதரிசி **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** கிராம ஊழியர்களுக்கு சில ஆலோசனைகளை சொல்லி உற்சாகப்படுத்தினார்கள்.

இதன்பின் கிராம ஊழியர்களை **10** குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமத்திலுள்ள மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்தார்கள். மதிய உணவுக்கு பின் குழுகுழுவாக ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்கு பிரிந்து சென்றார்கள்.

இந்த ஊழியத்தின்போது மொத்தம் 12,380 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 15,000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள், 500 மற்ற கைப்பிரதிகள், 10000 சிலுவைக்கொடிகள், 400 **'நம் மத்தியில் வாழ்ந்த அவர்'** புத்தகமும் இலவசமாக வழங்கப்பட்டன. ஊழியத்தின் மூலம் **167** புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து தபால் மூலம் வேதபாடம் அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.

ஊழியங்களை முடித்து, மீண்டும் சாலோம் திருச்சபையில் கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக நடத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். பின்பு **பாஸ்டர் ஜான் ஒயிட்** ஊழியர்களுக்கு இரவு விருந்தும், இனிப்பு பாக்கெட்டுகளும் கொடுத்து உபசரித்தார்கள். TVGM சார்பில் பிரயாணப்படி வழங்கப்பட்டது. இதன் பின் யாவரும் மகிழ்ச்சியோடு அவரவர் ஊர்களுக்கு திரும்பி சென்றார்கள்.

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 - பாஸ்டர். அமல்ராஜ், சகோ.செல்வராஜ், சகோ.அந்தோணி, சகோ. சவரிமுத்து.**

நாங்கள் கிராமங்களில் இயேசுவை அறிவித்து வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். **வண்ணான் பாறை** கிராமத்தில் ஒருவரை சந்தித்து சுவிசேஷம் சொன்னபோது அவருடைய குடும்ப பிரச்சனைகளை சொல்லி அழுதார். நாங்கள் ஜெபித்து **இயேசுவே ஆண்டவர்** என்று சொன்னபோது, அவர் ஏற்றுக் கொண்டார். **குன்னார் பாளையம்** கிராமத்தில் மக்கள் ஆர்வமுடன் சுவிசேஷத்தைக் கேட்டார்கள். இனி கிறிஸ்தவ சபைக்கு செல்வோம் என்று சொன்னார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 -சகோதரி மரியம்மாள், சகோதரி மணியம்மாள், சகோதரி செல்லக்கனி, சகோதரி ரெபேக்கா லட்சுமி.**

**வெப்படை** கிராமத்தில் தங்கி சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து ஊழியம் செய்தோம். நாங்கள் தங்கியிருந்த வீட்டிலுள்ள வாலிப பெண் மூன்று நாட்களுக்கு முன்பு எங்கோ போய்விட்டாள் என்று அவளின் பாட்டி எங்களிடம் சொல்லி அழுதார்கள். நாங்கள் ஜெபித்தோம். அடுத்தநாள் அந்த பெண் வீட்டுக்கு வந்து விட்டாள். தேவனுக்கு மகிமை செலுத்தினோம். ஒரு வாலிப பையன் எங்களை மதமாற்றம் செய்ய வந்தீர்கள் என்று போலீஸ்க்கு போன் பண்ணினான். போலீஸ் வந்து எங்களை அந்த கிராமத்தை விட்டு போகும்படி கூறினார்கள். நாங்கள் மற்ற ஊர்களுக்கு சென்று ஊழியம் செய்தோம். மொத்தம் 1300 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 -சகோ. பிரேம் ஆனந்த், சகோ.குமார், சகோ. ஆசீர், சகோ.மைக்கேல்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் யாவரும் விருப்பத்துடன் சுவிசேஷ புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். **கொத்தப்பாளையம்** கிராமத்தில் தெரு கூட்டம் நடத்தி சுவிசேஷத்தை பிரசங்கித்தபோது, அநேகர் வந்து கேட்டார்கள். முடிவில் ஜெபித்தபோது வியாதியஸ்தர் பலர் வந்து ஜெபித்துக் கொண்டார்கள். மக்களிடம் சந்தோஷம் உண்டாயிற்று . மொத்தம் 1035 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 -சகோதரி கஸ்தூரி சுப்பையா, சகோதரி கிருபா பழனியம்மாள், சகோதரி அன்னாள் சண்முகத்தாய், சகோதரி கஸ்தூரி அன்னாள்.**

**ஆவத்திபாளையம்** கிராமத்தில் நாங்கள் நடந்து போகையில் அநேக பெண்கள் தங்களுடைய பிள்ளைகளை கொண்டு வந்து ஜெபிக்க சொன்னார்கள். வியாதியஸ்தர்களுக்காகவும் ஜெபித்தோம். பலர் இனி கிறிஸ்தவ சபைக்கு செல்வோம் என்றார்கள். மொத்தம் 2015 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 -சகோதரி வசந்தா ஸ்டீபன், சகோதரி அன்னக்கிளி, சகோதரி கிளமெண்ட்ஸ்மேரி, சகோதரி கவிதா.**

**பள்ளிபாளையம்** மற்றும் இதைச் சுற்றியுள்ள கிராமங்களில் இயேசுவை

அறிவித்து வீடுவீடாக சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். வியாதியஸ்தர்களை எங்களிடம் கொண்டு வந்து ஜெபித்தார்கள். பிசாசு பிடித்திருந்த ஒரு பெண்ணுக்காகவும் ஜெபித்தோம். மொத்தம் 1130 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 -சகோ. யோசுவா, சகோ.பீட்டர், சகோ. ஜெபமலைநாதன், சகோ. பாபு.**

**கொக்கராயன்பேட்டை** கிராமத்தில் ஊழியம் செய்யக்கூடாது, புத்தகம் எதுவும் கொடுக்கக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தார்கள். அண்ணாநகரில் மக்கள் ஆர்வமுடன் சுவிசேஷத்தைக் கேட்டார்கள். ஒரு பிராமணரும் சுவிசேஷப் புத்தகத்தை அன்பாக பெற்றுக் கொண்டார். இயேசுவைப் பற்றிய புத்தகம் என்றவுடன் அதை எங்களிடம் திருப்பி கொடுத்து விட்டு இயேசு எனக்கு தேவையில்லை என்றார். மொத்தம் 1700 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 -சகோதரி சாந்தகுமாரி, சகோதரி சாரதா, சகோதரி லீலா, சகோதரி தேவகிருபை.**

**பாப்பம்பாளையம்** கிராமத்தில் ஊழியம் செய்தோம். அநேகர் எங்களை ஏற்றுக் கொண்டு சுவிசேஷப் புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். ஒரு சிலர் வேண்டாம் என்றார்கள். சிலர் எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஒருவர் ஆத்துமா என்றால் என்ன ? அதை எனக்கு காட்டி விட்டு போங்கள் என்றார். அவரிடம் கர்த்தருடைய வசனங்களை சொல்லிவிட்டு கடந்து வந்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 -சகோதரி தெபோராள், சகோதரி எஸ்தர் எபிநேசர், சகோதரி மரியாள், சகோதரி லூர்துமேரி.**

நாங்கள் சென்ற கிராமத்தில் பள்ளிக் கூட பிள்ளைகள் எங்களிடம் வந்து எழுதப்போகும் தேர்வில் நல்ல மதிப்பெண் எடுக்க ஜெபியுங்கள் என்றார்கள். இவர்களுக்காக ஜெபித்து, இயேசுவின் அன்பை கூறினோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 -சகோ. மாற்கு மாரியப்பன், சகோ. நோவா, சகோ. மகாராஜன், சகோ. ரூபன்.**

**ஆவத்திபாளையம், குள்ள நாயக்கன் பாளையம், தொட்டி பாளையம்** கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். அப்பொழுது ரேஷன் கடையில் வரிசையாக நின்று கொண்டிருந்தவர்களில் ஒருவர் எங்களிடம் எனக்கு ஒரு புத்தகம் கொடுங்கள் என்றார். அருகில் நின்ற ஒருவர் எனக்கும் கொடுங்கள் என்றார். அப்போது முதலில் வாங்கினவர் பாருங்கய்ய எப்படியெல்லாம் மதத்தைப் பரப்புகிறாங்க என்றார். உடனே அடுத்தவர் அந்த மனிதனிடம் நீ குடிக்கக் கூடாது, நல்ல மனுஷனா வாழனுமுன்னு புத்தகம் கொடுக்கிறாங்க. நீ படிக்கனுனா படி இல்லனா குடிச்சிட்டு சாகுகிறதுன்னா சாகு, ஏன் அவங்களிடம் வழக்கு பேசுற என்றார். நாங்கள் அங்கிருந்து கடந்து அடுத்த ஊர்களில் சுவிசேஷத்தை அறிவித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 -சகோதரி எஸ்தர் சாலமோன், சகோதரி பிச்சையம்மாள், சகோதரி தேவபாக்கியம், சகோதரி ராகேல்.**

நாங்கள் கிராமங்களில் வீடு வீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். அநேக மக்கள் எங்களிடம் ஜெபிக்கும்படி கேட்டார்கள். அவர்களுக்காக நாங்கள் ஜெபித்தோம். சிலர் எங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். மொத்தம் 1200 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை !**

**2012 ஜுன் மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : திருச்சி
யூனியன் : மருங்காபுரி
நாள் : 09.06.2012
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் P. கனகராஜ் சாமுவேல்**
**இயேசுவுக்கே புகழ் திருச்சபை**
**7 / 569 சீயோன் நகர்,**
**பாலக்குறிச்சி - 621 308.**
**திருச்சி மாவட்டம்.**
**செல் : 97513 57451**

# வருந்துகிறோம் !

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.
சங்கீதம் 116 : 15

**சகோதரி சலோமி சம்மனசுமேரி -**
**தோற்றம் 13.05.1956 மறைவு 03.12.2011**

TVGM **அறிமுகப்பணியாளர் சகோ. ஆரோக்கியம்** அவர்களின் மனைவியும், 100–கிராம ஊழியத்தில் மாதந்தோறும் கலந்துகொள்ளும் சகோதரியுமாகிய **சலோமி சம்மனசு மேரி** அவர்கள் கடந்த 03.12.2011 அன்று கர்த்தருக்குள் நித்தியடைந்தார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சகோ.ஆரோக்கியம், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி சீலா அம்மாள் - வயது 60**

2002ம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் தவறாமல் 100–கிராம ஊழியத்தில் கலந்துகொள்ளும் **திருமதி சீலா அவர்கள்** கடைசியாக 13.02.2012 ஆம் தேதி காஞ்சிபுரம் மாவட்டம்– திருப்போரூர் யூனியன் 100–கிராம ஊழியத்தை முடித்துவிட்டு, சொந்த ஊராகிய நாகர்கோவிலுக்கு திரும்பி செல்லும்போது, மதுரையில் ரயிலிருந்து இறங்கும்போது தவறி விழுந்து இடது காலில் அடிப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்கள். சிகிச்சை பலனளிக்காமல் 27.02.2012 அன்று மரணமடைந்தார்கள். இவர்களின் மகன்கள் மற்றும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு "100 - கிராம ஊழியம்"** திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

# இராமநாதபுரம் மாவட்டம் - கடலாடி யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2012 ஜூன் 18** திங்கள் காலை **9** மணி முதல் **ஜூன் 22** வெள்ளி இரவு **10** மணி முடிய **கடலாடி யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில்,,இயேசுவை அறிவித்து **"வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்"** இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2012 ஜூன் 18** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2012 ஜூன் 22** வெள்ளி இரவு **7 - 10** மணி

## உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் -** TVGM

C/o. **ஏ.ஜி. சபை ,**

**மூக்கையூர் ரோடு** ( பஜார் பஸ் ஸ்டாப் )**சாயல்குடி - 623 120.**

**இராமநாதபுரம் மாவட்டம். செல் :** 9952505811

உணவு , கூடுமிடம் உதவி செய்ய முன்வந்த Pr. R. ஜோசப் அவர்களுக்கு நன்றி.

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

***பிரயாணப்படி :*** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, **அனுமதி தபால்** பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

***முக்கிய அறிவிப்பு :*** **1.** இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

***சகல தொடர்புகளுக்கும் :*** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** சோமரசம்பேட்டை, திருச்சி - 620 102. **Web: tvgm.org**
**Ph : 0 - 431 - 2607241 , 94449 80445 Email : 100village@tvgm.org**

***தேவை :*** ஒரு மாதம் *10,000* வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க ரூ.75000 தேவைப்படுகிறது. கர்த்தரால் ஏவப்படுகிறவர்கள் தாங்க முன்வாருங்கள்.

## கன்னியாகுமரி மாவட்ட
## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2012 ஏப்ரல் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஏப்ரல் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றது. **கன்னங்குளம், சிதம்பரபுரம்** அறிமுகப் பணிகளில் கர்த்தருடைய ஆசீர்வாதம் நிறைவாயிருந்தது.

பறக்கை, மதுசூதனபுரம் பகுதிகளில் சுவிசேஷ ஊழியங்களுக்கு கர்த்தர் திறந்தவாசலை கட்டளையிட்டுள்ளார். ஆரம்பத்தில் பின்தொடர்பணிக்கு விலாசங்கள் கிடைக்காத நிலை காணப்பட்டது. ஆனால் இப்பொழுது விலாசங்கள் கிடைத்துள்ளன. பின் தொடர்பணியை ஜெபித்துடன் செய்து வருகிறோம்.

சுபாஷ்நகர் பகுதியில் சுவிசேஷக் கூட்டத்திற்கு தடை காணப்படுகிறது. தடைகள் நீங்கி, ஆத்துமாக்கள் பாவ, சாப, பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற ஜெபித்துடன் முயற்சிக்கிறோம். மார்த்தாண்டம் தரிசனமுகாமிற்காக ஜெபத்துடன் ஏற்பாடுகளை செய்து வருகிறோம். ஏப்ரல் மாத கடைசியில் திருச்சி தலைமை அலுவலகத்தில் 33வது ஆண்டு நிறைவுவிழா சிறப்புக் கூட்டங்களில் நாங்கள் யாவரும் பங்குபெற்று தேவனை மகிமைப்படுத்த கர்த்தர் கிருபை செய்தார். ஜெபமே ஜெயம் ! தேவனுக்கே மகிமை !


**TVGM அறிமுகப்பணி அலுவலகம்**<br>
**5 / 3A** கிரவுண் தெரு,<br>
வாத்தியார் விளை,<br>
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,<br>
N. ஷோபனா இவாஞ்ஜலின்<br>
செல்: **98658 26424**<br>
போன் : 04652 - 277251


## TVGM சிறுவர் இல்லம்.
## 70 பிள்ளைகளின் பள்ளிக்கூட தேவை ரூ.80,500

2012 – 2013 கல்வியாண்டிற்கு நமது 70 பிள்ளைகளுக்கும் உத்தேசமாக ரூ.**80,500** தேவைப்படுகிறது.

***ஸ்கூல் பீஸ் - ரூ.600 X 70பேர் = ரூ.42000***<br>
***நோட்புக் - ரூ.250 X 70பேர் = ரூ.17500***<br>
***யூனிபார்ம் - ரூ.300 X 70பேர் = ரூ.21000***

சராசரியாக 1 பிள்ளைக்கு ரூ. 1150

**குறிப்பு :** எல்லாப் பிள்ளைகளையும் நாங்கள் சமமாக எண்ணுவதால் ஒவ்வொரு தேவைகளும் கூடுதல் குறைவாக சந்திக்கப்பட்டாலும் TVGM சிறுவர் இல்ல ஒழுங்குபடி எல்லாப்பிள்ளைகளுக்கும் எல்லா தேவைகளும் சந்திக்கப்பட பகிர்ந்து அளிக்கிறோம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பரிசுத்தம்

கிறிஸ்தவ ஜீவியத்திலே பரிசுத்தம் என்பது இன்றியமையாதது. நாம் ஏன் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்று வேதம் பல காரணங்களைக் கூறுகிறது. 1 பேதுரு 1 : 15 ,16ல் பேதுரு இவ்வாறு கூறுகிறார் : "**உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தரா யிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தரா யிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.** " மத்தேயு 5 : 48 "**பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணரா யிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருக்க கடவீர்கள்.**"

நாம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். ஏனென்றால் இதற்காகத் தான் இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். பவுல் 2கொரி. 5 :15ல் இவ்வாறு கூறுகிறார்:– "**பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி அவர் எல்லா ருக்காகவும் மரித்தார் என்றும் நிதானிக்கிறோம்.**" மேலும் தீத்து 2 : 14ல் "**அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளை செய்ய பக்தி வைராக்கியம் உள்ளவர்களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி, நமக்காக தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்.**" இயேசுகிறிஸ்துவை நாம் உண்மையாக நேசிக்கிறோம் என்பதற்கு ஆதாரம் நாம் பரிசுத்தமாய் இருப்பது தான்.

ஒருவன் பரிசுத்தமாய் இருக்கும்போது தன்னைப் பாவங்களினின்று விலக்கிக் காத்துக் கொள்வான். அவன் எல்லாக் கட்டளைகளையும் கைக் கொள்ள முயற்சிப்பான். அவன் இயேசு கிறிஸ்துவைப் போல மாற முயற்சிப்பான். அவன் பரிசுத்த ஆவியானவரின் வரங்களைப் பின்பற்றி தேவ பக்தியுள்ளவனாக காணப்படுவான்.

இன்றைக்கு அநேக மக்கள் உலகத்தோடு இணைந்து விடுகின்றனர். அநேகர் வேதாகமத்தை தவறாக உபதேசித்து இந்த உலகத்தோடு ஒன்றி போகின்றனர். ஆனால் நாம் வேதத்தைப்

பற்றிக் கொண்டு அதிலுள்ள கட்டளைகளை பின்பற்றினால் நாம் நம்மை பரிசுத்தமாக காத்துக் கொள்ள முடியும். சிலர் சில நேரங்களில் மற்ற மக்களுக்காக தங்கள் பரிசுத்தத்தை விட்டு விடுகின்றனர். சில நேரங்களில் மாத்திரம் தங்களை பரிசுத்தர்களாக காட்டிக் கொள்வர். நாம் எப்போதுமே பரிசுத்தர்களாக காணப்படுவது அவசியமான ஒன்று. நம்முடைய பரிசுத்தத்தை ஆராய்ந்து பார்ப்போம்.

நாம் பரிசுத்தமாய் ஜீவிப்பதற்குப் போராட வேண்டும். பரிசுத்தமாய் ஜீவியம் பண்ணுவது எளிதல்ல. அதற்காக நாம் ஒவ்வொரு நாளும் போராட வேண்டும். நாம் இரத்தம் சிந்தும் அளவிற்கு பாவங்களை எதிர்த்துப் போராட வேண்டும். எபிரெயர் 12 : 4 "**பாவத்திற்கு விரோதமாய் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படதக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே**" என்று பவுல் கூறுகிறார்.

மேலும் நாம் பரிசுத்தமாய் வாழ நம்மை பயிற்சிக்க வேண்டும். பரிசுத்தமென்பது ஒரே நாளில் அடைந்து விட முடியாது. அதற்கு சில நாட்கள் தேவைப்படும். 1 தீமோத்தேயு 4 : 7 "**தேவபக்திக்கேதுவாக முயற்சிப் பண்ணு.**" ஆம் ! நாம் தேவபக்தியுள்ளவர்களாக மாற முயற்சிக் கும்போது, நாம் தேவனைப் போல பரிசுத்தமாய் மாறி விடுவோம்.

பரிசுத்தமாய் ஜீவிக்க நம்முடைய இருதயங்களைக் கழுவ வேண்டும். 2 கொரிந்தியர் 7 : 1ல் இவ்வாறு வாசிக்கிறோம், "**மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம்.**"

நாம் இத்தகைய பரிசுத்தத்தைக் கடைபிடிக்கும்போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். அவர் தம்முடைய மகிமைக்கென்று நம்மை எடுத்துப் பயன்படுத்துவார். நாம் பரிசுத்தமாய் இருக்கும்போது தான் தேவனை தரிசிக்க முடியும். எபிரெயர் 12 : 14 **"பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே."** மேலும் இந்த கடைசி நாட்களில் பரிசுத்தம் நமக்கு மிகுந்த அவசியமான ஒன்றாக இருக்கிறது.

ஆகவே நாம் ஒவ்வொரு நாளும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். வெளி. 22 : 11 **"பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்."** என்று எழுதியிருக்கிறபடி நாம் ஒவ்வொரு நாளும் அதிக பரிசுத்தமாக முயற்சிப்போம்.

**தேவனுக்கே மகிமை !**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

**துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!**

*பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.*

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள் !

**திருமதி தங்கராஜ், பாகோடு.**

என் மகளுக்கு சுகப் பிரசவம் ஆகவும், ஒரு ஆண்குழந்தையை கர்த்தர் கொடுக்கவும் ஜெபித்து வந்தேன். எங்கள் இல்லத்திற்கு மாதந்தோறும் வந்து ஜெபிக்கும் TVGM அறிமுகப்பணி அலுவலக சகோதரிகளும் பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஆண் குழந்தையைத் தந்தார். என் பொருத்தனையின்படி 100–கிராம ஊழியம் பத்திரிகையில் இந்த சாட்சியை எழுதி தேவனை மகிமைப்படுத்துகிறேன்.

**சகோ. ஜெரேமியா,**

மகன் மோசஸ் நன்றாக படித்தும் சரியான வேலையின்றி பலவித போராட்டங்களினால் மனவேத னையில் காணப் பட்டான். 100–கிராம ஊழியம் பத்திரிகையில் சாட்சி எழுது வதாக பொருத்தனையோடு ஜெபித்தான். கர்த்தர் மனமிரங்கி நல்ல வேலையைக் கொடுத்தார்.

**சகோதரி செல்லம்மாள், கோவை.**

எனது வலது கை மிகுந்த வேதனையாக இருந்தது. மருத்துவரிடம் செல்லாமல் 100–கிராம ஊழியம் பத்திரிகையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் உடனே என் கைவலியை குணமாக்கினார்.

**சகோதரி குளோரி தமிழ், புதுகை.**

நீங்கள் மாதந்தோறும் அனுப்பும் பத்திரிகை வாக்குத்தத்தம் சோர்ந்து போகும் போது என்னை தேற்றுகிறதாக இருக்கிறது. கர்த்தருடைய கிருபையால் எங்கள் வீடு கட்டப்பட்டது.

## புறமதநண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள் !

**சகோதரி மங்கை, திருச்சி.**

எனக்கு சுகர் வியாதி ஜெபிக்கும்படி கேட்டிருந்தேன். நீங்கள் ஜெபித்ததால் மருத்துவர் பரிசோதனை செய்து விட்டு சுகம் இல்லை என்று கூறினார். ஜெபத்தைக் கேட்டு சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**சகோதரி போதும்பொன்னு, புதுகை**

நீங்கள் அனுப்பிய 2012 பிப்ரவரி மாத இதழில் வந்த "**இனி நீ அழுதுகொண்டிராய்**" என்ற வசனம் என் வாழ்வில் நிறைவேறியது. என் 3 வது சகோதரியின் சுகபிரசவத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகபிரசவத்தில் ஆண்குழந்தையை கொடுத்தார். நீண்டகாலமாக என் எதிர்கால வாழ்க்கை துணைக்காக சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஜுன் 29ம் தேதி திருமணம் நிச்சயிக்கப்பட கிருபை செய்தார்.

**சகோ. ராமசாமி, வேலூர்.**

நீங்கள் அனுப்பிய வேதபாடத்தின் மூலம் ஆண்டவரின் ஆசீர்வாதத்தையும், சந்தோஷத்தையும் அடைந்துள்ளோம்.

**சகோதரி மனோன்மணி, விழுப்புரம்**

தாங்கள் அனுப்புகிற 'தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்' பத்திரிகை மிகவும் பயனுள்ளதாயும், எங்களை உயிர்ப்பிக்கிற வார்த்தையாகவும் உள்ளது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?

**"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்". 1தெச.** 5:17

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள் :*** 2011 - 2012 ஆம் TVGM & TASOL கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு 2012க்குள் சமர்ப்பிக்கப்படவும், கணக்கு காரியங்களை கவனித்து வரும் பிள்ளைகளுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தையும் பெலத்தையும் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

TVGM Trust -க்கு FCRA நிரந்தர ஆர்டர் கிடைக்க ஜெபியுங்கள்.

***செவ்வாய் :*** ஒவ்வொரு மாதமும் '100–கிராம ஊழியம்' மூலமாக 10,000 வீடுகளுக்கு சுவிசேஷப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஊழியங்கள் மூலமாக அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். இந்த ஊழியத்தின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்படவும், இதில் அநேக வாலிப தன்னார்வத் தொண்டர்கள் கலந்து கொள்ளவும் ஜெபியுங்கள்.

***புதன் :*** 2012 - 2013 கல்வியாண்டில் திருச்சி மற்றும் திருநெல்வேலியிலுள்ள சிறுவர் இல்லப் பிள்ளைகள், முழுநேர பணியாளர் பிள்ளைகளின் கல்வித் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். தேவன் இந்த தேவைக்கு தரக்கூடிய அநேக ஸ்பான்சர்களை எழுப்ப ஜெபியுங்கள். திருச்சி ஏலீம் சிறுவர் இல்லத்திற்கான J.J. ஆர்டர் கிடைக்க ஜெபியுங்கள். படிக்கும் அறைகள், நூலகம், சமையல்அறை மற்றும் ஸ்டோர் ரூம் ஆகிய கட்டிட தேவைகளுக்காகவும் ஜெபியுங்கள். ஒரு சதுர அடிக்கு ரூ.1000 ஆகிறது.3140 சதுர அடிக்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

***வியாழன்:*** அநேக இடங்களில் ஜெப வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அவைகள் முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள். இன்னும் அநேக தேவையுள்ள இடங்களை கண்டு கொள்ளவும், இதற்கான ஸ்பான்சர்களை தேவன் கொடுக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். மேலும் ஜெபவீடுகளை பார்வையிட ஏற்ற நபரை கர்த்தர் கொடுக்க ஜெபியுங்கள்.

***வெள்ளி :*** திருச்சியிலுள்ள TVGM தலைமை அலுவலகத்துக்கு ஏற்ற பணியாளர்கள் கிடைக்க ஜெபியுங்கள். தேவையான பணியாளர்கள் : – ஆங்கிலம் தெரிந்த Computer Staff, டிரைவர், தோட்டக்காரர், சமையல் ஆள் மற்றும் வாட்ச்மேன் அர்ப்பணித்த, தாலந்துள்ள பணியாளர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

***சனி :*** TASOL நிலங்களின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்படவும், ஏழை பிள்ளைகளை உயர் அதிகாரிகளாக மாற்றி அவர்களை கர்த்தருக்கு சாட்சியாக எழுப்பும் TASOL தரிசனத்திற்காக ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** TVGM & TASOL ஊழியங்களுக்காக ஜெபிக்கும், கொடுக்கும், உழைக்கும் பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். அவர்களுடைய குடும்ப வாழ்வும், ஆவிக்குரிய வாழ்வும் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

**காணிக்கை , பத்திரிகை சந்தா, தபால் அனுப்ப வேண்டிய**

**TVGM தலைமை அலுவலக முகவரி**


BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.

**TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)**

"1OO-VILLAGE" SOMARASAMPETTAI

TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445

Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628


| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| **100 கிராம ஊழியம்,** யோவான் சுவிசேஷம், பின்தொடர்பணி, **ஜெபவீடு** கட்டுதல், | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian Money<br>SB. A/c : **12491010 -11947** Foreign Money<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| முழுநேர ஊழியர் மற்றும் வட இந்திய ஊழியங்கள் – கைபிரதிகள், ஆலயம் கட்டுதல் | |
| சிறுவர் இல்ல பிள்ளை–களின் பராமரிப்பு, சிறுவர் இல்ல கட்டிடம், **மருத்துவ நிதி, தையற்மிஷின்,** | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian Money<br>SB. A/c : **12491010 - 24967** Foreign Money<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி** | |
| **TASOL**<br>**நிலம் வாங்குதல்**<br>**உயர் கல்வி நிதி** | **The Ambassador School of Learning - 80G** வரி விலக்கு<br>SB. A/c : **12491010 - 38110** Indian Money only<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **பத்திரிகை சந்தா**<br>**அச்சகம்** | TVGM Publication<br>SB. A/c : **12491010 - 25265** ( Indian Money)<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |

**குறிப்பு :** ஸ்தாபனம் பெயரில் காணிக்கைகளை அனுப்ப முடியாவிட்டால் Stephen Christopher S.B. A/c . No : **10848511949** State Bank of India Code : 930 Main Branch, Trichy, India. என்ற பெயரிலும் செக், டிராப்ட் எடுத்து அனுப்புங்கள்


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher
from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai,
Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers,
C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 066 / 2012 - 2014
Posting Date 25th at Trichy RMS





24.04.2012 திருச்சி – சோழன்நகரில் ஆராதனைக் கூடாரம் தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**நன்றி : Yishun Evangelical Church - Singapore.**





26.04.2012 அன்று சகோதரி ரெபேக்கா / பெலிக்ஸ் திருமணத்தை சகோ.P.T. கிறிஸ்டோபர் நடத்தி வைத்து, மணமக்களை ஆசீர்வதித்து ஜெபித்தார்கள்.

To

**Return Requested:** Tamil Village Gospel Mission
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.